முருகப்பெருமான் துணை

**மகான் தேரையர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.12.2022**, ஞாயிற்றுக்கிழமை

1. சரவணச் சுடரேற்றி பேருலகில்
சகலருக்கும் ஞானமருளுகின்ற
சரவணப்பெருமானின் அவதாரமே
சற்குருவே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது தேள்திங்கள்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் **25** ம் நாள் **11.12.2022**, ஞாயிற்றுக்கிழமை)
வரங்களென இருபானைதிகதி கதிர்வாரம்
வழங்குவேன் அனுகூல ஆசிதனை
3. ஆசிதனை தேரையர் யானும்
அகிலமாற்றம் அடைய உரைப்பேன்
வாசி வென்ற ஞானிகள்படை
வரம் தந்து அரங்கனோடிருக்க
4. இருக்கவே கலியுக மக்கள்
இணையிலா ஞானம் தேடியே
வருத்தமுற பலதிக்கிலும் அலையா
வணங்கி அரங்க ஞானிவாழும்
5. வாழும் பிரணவக்குடில் தன்னை
வணங்கி வந்தாலே போதும்
நாளும் கோளும் சாதமாகி
நமனையே வெல்லும் பலமும்
6. பலமான அறிவும் தெளிவும்
பரிபக்குவம் தரும குணமும்
வளமான வாழ்வும் நலமும்
வல்லமையான தேக மனபலமும்
7. பலமும் கூடி உலகமக்களுக்கு
பாவவினைகள் இனிசேரா
சலனமான மாயைகளும் விலகும்
சாபவினைகளும் பறந்தோடும்
8. ஓடியே உண்மை வழிகளே
ஓங்காரன் வழிபாடே என்னும்
ஒடுங்கி மனம் லயமாகியே
ஓங்காரம் நாளும் முழங்கி
9. முழங்கியே ஞானிகள் பூசை
முழுமதி கால பூசை வழிபாடு
புலங்கியே ஞானிகள் ஆசியும்
புண்ணியம் செய்திட பழக்கம் உருவாகி

10. உருவாகி அன்னதான சேவையும்
உலகமெங்கிலும் பெருகி நன்கு
குருவரங்கன் ஆசி தீட்சைபலமாக
குவலயம் பெரும் மாற்றம் காணும்

11. காணவே தேடிக்கிட்டா ஞானம்
கந்தவேலன் அவதாரமான
ஞானதேசிகனால் அரங்கேறி
ஞானிகளாவர் அனுகும் மக்கள்

அனுகூல ஆசி முற்றே

–சுபம்–